**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8603

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.10.2024

Accepted: 22.12.2024

Published: 01.01.2025

Citation:
Moovendan, P, Su. "Belief Myths in the Purathinai Society." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 66–72.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8603

*Corresponding Author:
psmnthn757@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Belief Myths in the Purathinai Society

**P. Su. Moovendan**
*Associate Professor, Department of Tamil Studies*
*Arulmigu Subramaniaswamy Government Arts College, Tiruttani*

**Abstract**
*In the twentieth century, literary studies have evolved into various research fields. Influenced by Western scholarship, literary criticism has expanded into multiple specialized domains, including hermeneutic criticism, comparative criticism, appreciative criticism, and myth criticism. Among these, folklore criticism has seen significant growth, leading to the development of mythological studies. As a result, oral literary traditions passed down through generations have gained prominence. Myths permeate every aspect of society, influencing its cultural and ideological structures. Hence, myths are explicitly reflected in Sangam literature. This study examines the myths present in Purananuru, one of the classical Tamil Sangam literary texts, focusing on belief myths as a research subject.*

***Keywords:*** *Myth, Sangam Literature, Mythological Studies, Belief Myths*

**References**

1. Annamalai, V. (Ed.). (1990). Sangam Literary Mythological Encyclopedia, Volumes 1 & 2. Manivasagar Publishers, Chennai.
2. Sundaramurthi, (Ed.). (1984). Tolkappiyam: Porulathikaram, Annamalai University, Annamalainagar.
3. Tamilannal. (2000). Sangam Literary Theories, Volumes 1 & 2. Meenakshi Book House, Madurai.
4. Balasubramaniam, Ku. Ve. (Ed.). (2004). Sangam Literature: Purananuru, Volumes 1 & 2. New Century Book House Pvt. Ltd., Chennai.

# புறத்திணைச் சமூகத்தில் நம்பிக்கைத் தொன்மங்கள்

***முனைவர் ப.சு. மூவேந்தன்***
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக்கல்லூரி, திருத்தணி

***ஆய்வுச்சுருக்கம்***
*இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய ஆய்வுகள் பல்வேறு வகைப்பட்ட ஆய்வுக் களங்களை உருவாக்கித் தந்துள்ளன. இவற்றுள் நாட்டுப்புறவியல் திறனாய்வு புதிய வளர்ச்சியை எட்டியுள்ளது. இவற்றின் ஒரு கூறாகத் தொல்படிமவியல் ஆய்வுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. இதன் காரணமாக மக்களிடையே காலம்காலமாக வழங்கிவரும் வாய்மொழி இலக்கிய வடிவங்களைப் பற்றிய செய்திகள் வெளிப்பட்டு வருகின்றன. தொன்மங்கள் சமூகத்தின் ஒவ்வொரு நுண் கூறுகளுக்குள்ளும் நுழைந்து ஊடுருவிச் செல் கின்றன. எனவே தான், சங்க இலக்கியங்களில் தொன்மங்கள் வெளிப்படுகின்றன. அவ்வாறு காணக் கிடைக்கின்ற தொன்மங்களை ஆய்வுக்களமாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் பயின்று வந்துள்ள தொன்மங்களை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.*
***குறிச்சொற்கள்:*** *தொன்மம், சங்க இலக்கியம், தொன்மப்படிமம், நம்பிக்கைத் தொன்மம்*

## முன்னுரை

இலக்கிய உருவாக்கத்தில் படைப்பாளரின் படைப்புத்திறத்தோடு பல்வேறு வகைப்பட்ட வாழ்வியல் வழக்காறுகள் தொன்மங்களாகப் படிந்துள்ளன. தொன்மங்கள் நாட்டார் வழக்காற்றியலின் எச்சங்களாக, குறிப்புச் சொற்களாக அமைந்துள்ளன. சங்க அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் இவற்றின் தாக்கம் மிக்கிருத்தலைக் காணலாம். அவ்வகையில் மக்கள் வழக்காற்று எச்சங்கள் குறிப்புரைகளாக, குறியீடுகளாகப் புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள திறம் குறித்து இக்கட்டுரையில் ஆராய்ந்துரைக்கப் பெறுகிறது.

## தொன்மம்

தமிழில் தொன்மை என்ற சொல்லுக்குப் பதிலாகத் தொன்மம் என்ற சொல்லை முதன்முதலில் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் உருவாக்கினார். உலகளவில் தொன்மம் என்ற சொல் மித் (myth) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரனதாக ஆளப்படுகிறது. தொன்மவியல் என்பதற்கு மித்தாலஜி (mythology) என்று பொருள் உரைக்கின்றனர். *(ப. 56)*

தொன்மம் என்ற சொல் தொல்காப்பியத்தில் தொன்மை என்று குறிக்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியர்,

> **“தொன்மை தானே சொல்லுங்காலை**
> **உரையொடு புணர்ந்த பழமை மேற்றே”**
> ***(தொல். பொருள். நூ. 1493)***

என்பதில் தொன்மை என்ற சொல்லை எடுத்தாண்டுள்ளார். இதன் உரைவிளக்கத்தில், ‘தொன்மையாவது உரையொடு பொருந்தி போந்த பழமைத்தாகிய பொருண்மேல் வருவன’ என்று குறிப்பிடுகிறார்; இளம்பூரணர்.

## இலக்கியத்தில் தொன்மவியல்

ஓர் இனத்தாரிடையே அல்லது குழுவினரிடையே வழக்கத்திலிருந்துவரும் தொன்மங்களை அறிவியல் மற்றும் வரலாற்று அடிப்படையில் ஆராயும் பிரிவுக்குத்

தொன்மவியல் என்று பொருள்விளக்கம் தரப்படுகிறது.

தொன்மை என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் புராணத்தைக் குறித்தது. காலப் போக்கில் இச்சொல்லின் பொருள் 'பழமை' என்று மட்டும் பொருளுணர்த்தியதோடு தான் சுட்டிய பொருளின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதாய் அமைந்துவிட்டது.

இலக்கியத் திறனாய்வாளர் ரெனிவெல்லாக், ஓர் இலக்கியப் படைப்பில் தொன்மங்கள் இலக்கிய உத்திகளாகப் பயன்படுகின்றன என்றுரைக்கிறார். உரைநடையிலிருந்து கவிதையை வேறுபடுத்துவன அக்கவிதையில் வரும் உருக்காட்சி, படிமம், தொன்மம் என்ற மூன்றுமே என்பது அவரது கருத்தாகும். (ப.67) ஆதலால் இலக்கியப் படைப்பில் தொன்மங்களின் பங்கு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளதனை அறியலாம்.

மனித இனம் முழுவதற்கும் பொதுவான அடிமனக்கூறு ஒன்று உண்டென்றும் அதிலிருந்து தொன்மங்கள் வெளிப்படுகின்றன என்றும் உளவியல் அறிஞர் யுங் (ப. 67) குறிப்பிடுகிறார். அவரது கூற்றின்படி புராணங்கள் ஒரு சமூகத்தின் உயிர்ப்பொருளாக விளங்குகின்றன என்பதாகும்.

தமிழில் தொன்மம் குறித்த சிந்தனைகள் அண்மைக் காலமாக வளர்ந்து வருகின்றன. இக்கட்டுரையில் தொன்மம் குறித்த சான்றுகளை வைத்து மக்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், தெய்வங்கள் போன்றவற்றைப் பற்றி அறிய முற்படுகிறது.

## சங்க இலக்கியத்தில் தொன்மங்கள்

சங்கப் பாடல்களில் தொன்மம் பற்றிய செய்திகள் மிகப் பரவலாக இடம் பெற்றுள்ளன. மேலும், சங்கப் பாடல்களில்; தொன்மங்கள் உவமைகளாகவும் குறியீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலக்கியங்களில் இடம்பெறும் தொன்மங்களை மனிதவாழ்வியல்சார் தொன்மங்கள் என்றும். இயற்கை மற்றும் உலகியல்சார் தொன்மங்கள் என்றும் வகைப்படுத்துவர். இவற்றில் மக்கள் வழக்காற்றியலோடு தொடர்புடைய நம்பிக்கைசார் தொன்மங்கள் ஆராய்ந்துரைக்கப்பெறுகிறது.

## நம்பிக்கைத் தொன்மங்கள்

மக்கள் வழக்காற்றியலோடு நம்பிக்கைகள் பல்கிப் பெருகியுள்ளன. மக்கள் தங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக நம்பிக்கையோடு தொடர்புபடுத்திக்கொண்டுள்ளது. மேலும், நம்பிக்கைத் தொன்மம் பழக்க வழக்கத் தொன்மத்துடன் தொடர்புடையதாகும். நம்பிக்கைத் தொன்மத்தின் வாயிலாகத் தனிமனிதனின் பழக்க வழக்கங்களையும், ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்களையும் விளங்கிக் கொள்ள இயலும். இதன்வழி தொன்மைத்தமிழர் சமூக வாழ்வியலை அறிந்துகொள்ள இயலும்.

## மழைத் தொன்மம்

பல்லாண்டுகள் மழையின்றிப் போனால் அது தெய்வக் குற்றத்தால் நிகழ்ந்தது என்று நம்பியிருப்பதும், அதேபோல் மழை மிகுதியாகப் பெய்யும்போதும், மழை பெய்தது போதும் என்று தெய்வத்திடம் சென்று முறையிட்டால் மழை நின்று போகும் என்று நம்பிக்கைக் கொண்டிருந்ததைப் புறநானூற்றில்.

**"மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்"**

**(புறம். 143:2-3)**

என்னும் பாடற்பகுதி உணர்த்துகிறது.

## கனவில் கண்டது பலித்தல்

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் கனவு சிறப்பிடம் பெற்றிருக்கிறது. கனவு, உளவியல் தொன்மத்துடன் தொடர்புடையதாகும். சங்க இலக்கியத்தில் மானுடர்கள் மட்டுமன்றி அஃறிணைப் பொருள்களும் கனவு காண்பதாகக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. கனவு

வரவிருக்கும் நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பனவாக, முன்னரே உணர்த்துவனவாக இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். புறநானூற்றில்,

**"கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப**
**நனவின் நல்கியோன்............"**

***(புறம். 371:19-20)***

**"ஆங்கவை கனவென மருள வல்லே நனவின்**
**நல்கி யோனே..................."**

***(புறம். 387:26-27)***

**"................காவலர்**
**கனவினும் குறுகாக் கடியுடை வியனகர்"**

***(புறம். 390:5-6)***

என்னும் அடிகளில் கனவு குறித்த தொன்மங்கள் இடம்பெற்றுள்ளன.

### வழிபாட்டு நம்பிக்கை

வெற்றிக்குரிய மங்கையாகக் கொற்றவை சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெறுகிறாள். போர்ச் சமூகத்தில் கொற்றவையை வழிபாடு செய்தால் வெற்றி நிச்சயமாகக் கிட்டும் என்று சங்கத் தமிழர் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இவ்வாறு போரின் போது வீரர்கள் கொற்றவையை வழிபாடு செய்ததைத் தொல்காப்பியர்,

**"கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"**

***(நூ. 1005)***

என்று கூறுகிறார். மேலும் போரில் கொற்றவை வழிபாடு சிறப்பிடம் பெறுவதன் பொருட்டு இதனை, வெட்சிக்கும் வஞ்சிக்கும் உரித்தான துறையாகக் கூறுவார். போர் விரைவில் வெற்றியுடன் முடியுமாறு கொற்றவையை வேண்டி நின்றதை, நெடுநல்வாடை,

**"புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு**
**இன்னா அரும்படர் தீர விறல்தந்து**
**இன்னே முடிகதில் அம்ம..."**

***(நெடுநல். 165-168)***

என்று குறிப்பிடக் காணலாம்.

### வெறியாட்டு நம்பிக்கை

வெறியாட்டு அகத்திணை சார்ந்ததும், முற்றிலும் நம்பிக்கைத் தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டதுமாகும். வெறியாட்டுக்கு முன் கட்டு. கழங்கு இவற்றை ஆய்ந்து உறுதிசெய்த பிறகு வெறியாட்டு நிகழ்த்தப்பெறும்.

சங்கத் தமிழர் வாழ்வில் முருகனுக்கு மட்டும் வெறியாட்டு எடுக்கப்படுகின்றது. முருகனின் அழகும், இளநலமுமே அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆடுமகள் (கட்டுவிச்சி) வேலன் (வெறியாடுபவன்) ஆகிய இருவரும் வெறியாட்டிற்கு உரிமையுடையவர்களாவர். வெறியாட்டு பற்றித் தொல்காப்பியர்.

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டயர்ந்த காந்தளும்"**

***(நூ. 1006:1-2)***

என்னும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார். புறநானூற்றில் வெறியாட்டு நிகழ்த்திய செய்தி,

**"காவு தோறிழைத்த வெறியயர் களத்தின்"**

***(புறம். 156:7)***

என்று குறிக்கப் பெறுகின்றது.

### வலம் வீழ்தல்

ஒரு விலங்கு தன் இரைக்காக மற்றொரு விலங்கை அடித்து வீழ்த்தும்போது அடிப்பட்ட விலங்கு வலப்புறம் வீழ்ந்தால் மட்டுமே உண்ணும் என்று சங்கத் தமிழர் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். மேலும் வீழ்த்தப்பட்ட விலங்கு இடப்புறம் வீழ்ந்தால் உண்ணாது என்பது சங்கத் தமிழர் நம்பிக்கை. இவ்வாறு இடம் வீழ்தல் பற்றிய நம்பிக்கையைப் புறநானூற்றுப் பாடல்,

**"கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென**
**அன்றுஅவண் உண்ணா தாகி வழிநாள்**
**பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து**
**இருங்களிறு ஒருத்தல் நுல்வலம் பிரிக்கும்"**

***(புறம். 214:1-3)***

என்று எடுத்துரைக்கின்றது.

**நிமித்தம் பார்க்கும் நம்பிக்கை**

நிமித்தம், எதிர்வரப்போகும் நன்மை தீமை இரண்டையும் உணர்த்தும். விரிச்சி-நற்சொல். எனவே அது, நன்னிமித்தத்தை மட்டும் உணர்த்தும். புள் என்பது நன்மை தீமை என்ற பொருள்களிலும் பறவை நிமித்தம் என்ற பொருளிலும் விரிச்சி (வாய்ப்புள்) என்ற பொருளிலிலும் வருகிறது.

தாவரங்கள், செடிகொடிகள், விலங்குகள் முதலான அஃறிணைப் பொருள்களைக் கொண்டு மக்கள் நிமித்தம் அறிதலும், பல்லி, காக்கையின் சொற்கேட்டலும் மக்களிடையே வழக்கிலிருந்து வந்துள்ளன.

நிமித்தம் (நன்மை-தீமை) பற்றித் தொல்காப்பியர்

**"மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்"** **(தொல். நூ. 992)**

**"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தம்"**

**(தொல். நூ. 1037)**

என்று குறிப்பிடுகிறார். சங்கத் தமிழர் போரில் வாழ்வில் நிமித்தம் பார்த்துப் போர்க்குச் சென்றதைப் புறநானூறு,

**"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**
**உள்ளிச் சென்றோர்ப் பழியலர்"**

**(புறம். 204:10-11)**

**"புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்**
**விறுப்புற அறியா ஏமக் காப்பினை"**

**(புறம். 201:8-19)**

என்று எடுத்துரைக்கிறது.

**பலியிடும் நம்பிக்கை**

பலி கொடுத்தல் என்பது நம்பிக்கைத் தொன்மத்துடன் தொடர்புடைய தொன்மம் ஆகும். உயிர்ப்பலி, குருதிப்பலி, சோற்றுப்பலி, பூப்பலி, தேன்பலி எனப் பலிப் பொருள்கள் பலவகையில் சங்கத் தமிழர் வாழ்வில் இடம்பெற்றிருந்துள்ளன. பேய்கள், கொற்றவைக்குப் பலி கொடுப்பது; மக்கள் பேய்க்குப் பலிகொடுப்பது முதலான நிகழ்வுகள் புறப்பாடல்களில் காணப்படுகின்றன. புறநானூற்றில் கொற்றவைக்கு உயிரைப் பலியாகத் தந்த நிகழ்வு,

**"மாமறி பிண்டம் வாலுவன் ஏந்த"**

**(புறம். 372:4-6)**

**"காவன் மன்னர் கடைமுகத்து உகுக்கும்**
**போகுபலி வெண்சோறு போலத்**
**தூவவும் வல்லன்.."** **(புறம். 331:11-13)**

என்ற அடிகளில் குறிக்கப்படுகிறது.

**நரகம் புகுதல் குறித்த நம்பிக்கை**

மரணத்திற்குப் பின் மனிதன் நிலையை விளக்கிக்கூற நம்பிக்கையுடையவரை நன்னெறிப்படுத்தும் நோக்கம் உடையன நிரையம் (நரகம்) எனப்படும். நிரையம் பற்றிய தொன்மம் குறித்துப் புறநானூற்றில்,

**"நிரையம் கொள்பவரொடு ஒன்றாது"**

**(புறம். 51)**

என்று குறிக்கப்படுகின்றது.

**கூற்றம் குறித்த நம்பிக்கை**

உயிரினங்களின் உயிரைப் பறிக்கும் உரிமையாளனாகக் கூற்றுவன் விளங்குவதாகச் சங்கத் தமிழர் நம்பினர். சங்க இலக்கியத்தில் கூற்றமானது, மடங்கர், மீளி, எமன், இயமன், மறலி, கணிச்சிப் படையோன், எருமை ஊர்தி உடையோன் என்னும் பெயர்களில் குறிக்கப்படுகின்றது. கூற்றம் பற்றிய தொன்மக்கூற்று உலக நிலையாமை குறித்துவரும் இடங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. கூற்றுவன் குறித்த நம்பிக்கை புறநானூற்றில்,

**"மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக்**
**கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி"**

**(புறம். 3:12-13)**

**"தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து**
**மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்**
**நின்னொடு தூக்கிய வெள்வேற் செழிய"**

**(புறம். 19:2-4)**

என்னும் பாடலடிகளில் இடம் பெற்றுள்ளன. இதில் கூற்றம் என்பது நிலையாமையை விளக்குவதற்காகவும், மன்னர்களின்

பகையழிக்கும் ஆற்றலை விளக்குவதற்காகவும் நம்பிக்கைத் தொன்மமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### விழுப்புண்-புறப்புண் குறித்த நம்பிக்கை

விழுப்புண்-புறப்புண் என்பன வீரர்தம் போர் வாழ்க்கையில் ஏற்பட்ட நம்பிக்கைக் குறிகளாகும். விழுப்புண் முகத்திலும், மார்பிலும், தோளிலும் ஏற்படும் புண். புறப்புண் - முதுகில் ஏற்படும் புண். விழுப்புண் பெற்ற வீரர் போற்றப்படுவர். அவர்க்கு வீரசுவர்க்கம் கிடைக்கும் என்பது சங்கத் தமிழர் நம்பிக்கை. புறப்புண் பெற்ற வீரர் பிறரால்; பழிப்புக்கு உள்ளாவர். உயிரினும் சிறந்தது மானம் என்ற உணர்வுடைய வீரர் விழுப்புண் பெறுதலையே விரும்புவர் என்பது சங்க கால நம்பிக்கை.

வீரன், போரில் விழுப்புண் பெற்று இறக்காமல். இயற்கையாக இறந்தாலும் அவன் உடலைத் தர்ப்பையில் கிடத்தி. மார்பில் வாளால் கீறி, அதன்பிறகு அடக்கம் செய்வார்கள். இச்செய்தி புறநானூற்றில்,

**"தன்போல் வேந்தன் முன்பு குறித்த எறித்த**
**புறப்புண் நானி............................"**
**(புற. 65:9-10)**

**"புறப்புண் நாணி வடக்கிருந்தோனே"**
**(புற. 66:8)**

என்னும் அடிகளில் குறிக்கப்பெற்றுள்ளன.

### நடுகல் வழிபாட்டு நம்பிக்கை

சங்கத் தமிழர்களிடத்தில் நடுகல்லில் தெய்வம் உறைவதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. அவ்வகையில் போரில் விழுப்பண்பட்டிறந்த வீரர்களுக்கு நடுகல் நடும் வழக்கம் சங்கத் தமிழர் வாழ்வில் சிறப்பிடம் பெற்றிருந்தது. எழுத்துடை நடுகல் - பீடும் பெயரும் எழுதப்பெற்ற நடுகல். நடுகல் வழிபாட்டு மரபே பிற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடாக வளர்ந்து வந்துள்ளது. நடுகல் பற்றித் தொல்காப்பியர்,

**"காட்சி காள்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்"**
**(தொல். நூ. 1006)**

என்று குறிப்பிடுவார். புறநானூற்றில் நடுகல் பற்றிய தொன்மக் குறிப்புக்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதனை,

**"மனைக்குவிளக்கு ஆகிய வாணுதல் கணவன்**
**முனைக்குவரம்ப ஆகிய வென்வேல் நெடுந்தகை**
**நடுகல் பிறங்கிய உவலிடு பறந்தலை"**
**(புறம். 314:1-3)**

என்னும் பகுதியிலும்,

**"புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி**
**நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய**
**மங்குள் மாப்புகை மறுகுடன் கமழும்"**
**(புறம். 329:2-4)**

என்னும் பகுதியிலும் இடம்பெறும் அடிகளைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

வீரசுவர்க்கம் அடையும் நம்பிக்கை

போரில் விழுப்புண்பட்டு இறந்துபட்ட வீரர்கள் வீரசுவர்க்கம் அடைவர் என்று போர்ச் சமூகத்தில் பெருநம்பிக்கை இருந்துள்ளது. இவ்வகையில் வீரசுவர்க்கம் அடைதல் குறித்த நம்பிக்கை இருந்ததை,

**"ஓடன் மரீஇய பீடின் மன்னர்**
**..**
**வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ"**
**(புறம். 93:4-11)**

என்னும் அடிகள் கொண்டு அறிந்து கொள்ளமுடிகிறது. இவை போன்று பல்வேறு நம்பிக்கைகள் தமிழர்களிடத்தில் தொன்மங்களாக நிறைந்திருந்ததைக் காணமுடிகிறது.

### முடிவுரை

தொன்மங்கள் தனிமனிதரால் படைக்கப்படுவன அல்ல. அவை மக்களிடையே காலம் காலமாக மக்கள் பழக்கங்களாக நிலைத்திருந்து, பின்னர் வழக்கங்களாக உருப்பெறுகின்றன. இவற்றை வாய்மொழி இலக்கியங்களின் எச்சங்கள் என்றும் கூறுவது பொருந்தும்.

ஒரு சமூகம் தன்னளவில் எவ்வளவு பெரிய வளர்ச்சியை அடைந்திருந்தாலும் மனிதனுடைய ஆழ்மனத்தில் வரலாற்றுக்கு முந்தைய தனது மூதாதையர்களின், தனது முன்னோர் இனத்தின் அறிவும் உணர்வும் நினைவுகளும் சாராம்சமாகிப் படிந்து, உறைந்து கிடப்பதைத் தொன்மவியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அவை எல்லாக் காலங்களிலும் அனைத்துச் சமூகங்களிலும் குறியீடுகளாக, தொன்மங்களாக, எச்சங்களாக, படிமங்களாக வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் என்பதனை இவ்வாய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

**துணைநூல்கள்**

1. அண்ணாமலை, வே., (தொ.ஆ.), சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், தொகுதி-1 2; மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990
2. சுந்தரமூர்த்தி, (ப.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1984
3. தமிழண்ணல், சங்க இலக்கியக் கொள்கைகள், தொகுதி 1 2, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2000
4. பாலசுப்பிரமணியன், கு.வே., (ப.ஆ.), சங்க இலக்கியம், புறநானூறு, தொகுதி 1 2; நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பி.லிட்,, சென்னை, 2004